# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.29/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.5 |
| Name | : | டெல்லிபாபு |
| Father's Name | : | த.பெ.கன்னியப்பன் |
| Village | : | தென்எலப்பாக்கம் |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 51 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 27.05.2026.

**எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் நான் கோழிபண்ணை வைத்து விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.3 ஆகும். அந்த கையெழுத்தை சுமார் 10 வருடத்திற்கு முன்பாக நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரி பாலமுருகன் அவர்களின் கழனி பக்கத்தில் வைத்து போலிசார் படம் வரைந்து வாங்கினார்கள்.

தற்போது என்னிடம் காட்டப்படும் வரைபடத்தைதான் அன்றைய தினம் போலிசார் வரைந்தார்கள் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எந்த தேதியில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சம்பவம் நடந்த மறு நாள் வந்தார்கள். என்னிடம் போலிசார் அ.சா.1ன் கழனி எங்குள்ளது என்று கேட்டதால் நான் அழைத்துச்சென்று காட்டினேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் போலிசார் சம்பவ இடத்தில் வரைந்து கொண்டிருந்தார்கள். நான் கையெழுத்து செய்த மற்றொரு தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் நான் படித்து பார்க்கவில்லை.

**மறு விசாரணை.**

இல்லை.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court, Read over to the witness and Admitted by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.